இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 05

# EPU5550– ஆரம்பக்கல்விக்கான உளவியல்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 18.02.2024 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1. கற்றல் அனுபவங்களை ஒழுங்கமைப்பதில் கல்விசார் உளவியல் அறிவை ஆசிரியர் எவ்வாறு பயன்படுத்துகிறார்? மூன்று (03) காரணிகளைப் பயன்படுத்தி விளக்குக.

2. தோண்டைக் (Thorndike) முன்வைத்த முயன்று தவறல் கோட்பாட்டின் இரண்டு (02) கொள்கைகள் பற்றி சுருக்கமாக விளக்குக.

3. பிள்ளைகளின் நடத்தை பற்றி பெற்றோரிடமிருந்து தரவுகளைச் சேகரிக்க இரண்டு (02) திறந்த வினாக்களை எழுதுக. ஒரே தரவினைப் பெற்றுக்கொள்ள அவ் இரு (02) வினாக்களையும் மூடிய வினாக்களாக எழுதுக.

4. ஆயத்த நிலையின் எண்ணக்கருவினை உதாரணங்கள் மூலம் விளக்குக.

5. முன் இயக்க பருவ நிலையில் (2 – 7 ஆண்டுகள்) பிள்ளைகளால் வெளிப்படுத்தப்படும் அறிவாற்றல் விருத்தியுடன் தொடர்புடைய நான்கு (04) நடத்தை பண்புகளை எழுதுக.

6. மாஸ்லோவின் (1954) தேவைகளின் படிநிலைக்கோட்பாடு தேவைகளை மிகவும் முறையான மற்றும் முழுமையாக பகுப்பாய்வு செய்து வழங்குகிறது. அத்தேவைகளின் படிநிலைகளைக் குறிப்பிடுக.

7. பிள்ளைகளால் வெளிக்காட்டப்படும் மனவெழுச்சிகளின் ஐந்து (05) வடிவங்களை எழுதுக.

8. கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறையில் புருணரினுடைய அறிவாற்றல் விருத்திக் கோட்பாட்டின் இரண்டு (02) முக்கிய கொள்கைகளை நீங்கள் எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள் என்பதை சுருக்கமாக விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி II

9. (i) கல்விசார் உளவியலில் பயன்படுத்தப்படும் பரிசோதனைசார் முறை, பரிசோதனையற்ற முறைகளை உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(05 புள்ளிகள்)**

(ii) பிள்ளைகளின் நடத்தையைப் பற்றி கற்பதற்கான இரண்டு (02) பொருத்தமான பரிசோதனையற்ற முறைகள் பற்றி கலந்துரையாடுக.

**(09 புள்ளிகள்)**

**(iii)** மேற்குறிப்பிட்ட இரண்டு (02) முறைகளின் பலம் மூன்று (03) மற்றும் பலவீனங்கள் மூன்று (03) பற்றி கலந்துரையாடுக.

**(06 புள்ளிகள்)**

10. **(i)** பிள்ளையொன்றின் வளர்ச்சி மற்றும் விருத்தியில் பரம்பரை காரணிகள் மற்றும் சூழல் காரணிகள் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என்பதை உதாரணங்கள் மூலம் கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

**(ii)** ஆசிரியரென்ற வகையில் பிள்ளையொன்றின் வளர்ச்சி மற்றும் விருத்திக்கு ஏற்றவாறு வீட்டுச்சூழலை ஒழுங்கமைப்பதில் பெற்றோரை எவ்வாறு ஆதரவளிக்கிறீர்கள் என்பதை படிப்படியாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

11. **(i)** பிள்ளைகளின் மனவெழுச்சி குழப்பங்களிற்கான மூன்று (03) காரணங்களை சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**(ii)** மனவெழுச்சி குழப்பங்கள் உள்ள பிள்ளைகளிடம் நீங்கள் அவதானிக்க கூடிய ஐந்து (05) நடத்தை பண்புகளை எழுதுக.

**(05 புள்ளிகள்)**

**(iii)** கல்வி உளவியல் அறிவின் உதவியுடன் மேற்கூறிய ஐந்து (05) பண்புகளை வெளிப்படுத்தும் பிள்ளைகளின் மனவெழுச்சி குழப்பங்களை குறைக்க ஆசிரியரென்ற வகையில் நீங்கள் எவ்வாறு செயற்படுகிறீர்கள் என்பதை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

12. **(i)** வரைவிலக்கணத்தை பயன்படுத்தி **"ஊக்குவிப்பு" (Motivation)** பற்றி விளக்குக.

**(03 புள்ளிகள்)**

**(ii)** அறிவாற்றல் அணுகுமுறையால் விளக்கப்பட்டுள்ள படி தனிநபர்களில் ஊக்குவிப்பு ஏற்படும் வழிகளை விபரிக்குக.

**(07 புள்ளிகள்)**

**(iii)** ஆசிரியரென்ற வகையில் நீங்கள், ஆரம்ப வகுப்பு மாணவர்களின் கற்பித்தல் மற்றும் கற்றல் செயற்பாட்டில் உந்தலுக்கான அறிவாற்றல் அணுகுமுறையை எவ்வாறு பின்பற்றலாம் என்பதை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

13. **(i)** புலக்காட்சி மற்றும் கவனம் (Attention) பற்றிய எண்ணக்கருவை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**(ii)** "சரியான புலக்காட்சிக்கு கவனம் முக்கியமான காரணியாகும்." இது குறித்த உங்கள் கருத்துக்களை தர்க்கரீதியாக முன்வைக்குக.

**(06 புள்ளிகள்)**

**(iii)** பாடத்திட்டத்தின் மூலம் கவனத்தை ஈர்ப்பதற்காக ஆரம்ப பாடசாலை ஆசிரியரென்ற வகையில் நீங்கள் பயன்படுத்தும் நான்கு (04) உத்திகளைப் பற்றி கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

(முழுப்பதிப்புரிமையுடையது)